## குறிக்கோள்-காரண விவரவுரை

நமது ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் மருத்துவக்காப்புச் சேவைப் பணியாளர்களின் உயிருக்குத் தீங்கு அல்லது ஆபத்தை விளைவிக்கக்கூடிய மற்றும் மருத்துவக்காப்புச் சேவை நிலையங்களின் சொத்துக்குச் சேதம் அல்லது இழப்பு விளைவிக்கக்கூடிய வன்செயல் நிகழ்வுகள் அதிகரித்து வருகின்றன; இது மருத்துவக்காப்புச் சேவைப் பணியாளர்களிடையே அமைதியின்மையை உருவாக்குகிறது; மேலும், நமது ஆட்சிப்பரப்பில் அத்தகைய சேவைகளுக்கு முற்றிலும் தடையாக அமைகிறது.

எனவே, அக் குற்றச்செயலானது, கைதுசெய்வதற்குப் பிடியாணை வேண்டாத மற்றும் பிணையத்தில் விடப்படக்கூடாத குற்றச்செயல் எனக் கொள்ளப்படுவதுடன், அத்தகைய வன்செயல் புரியும் நபர்களை அத்தகைய மருத்துவக்காப்புச் சேவை நிலையங்களின் சொத்துக்களுக்கு விளைவிக்கப்பட்ட சேதம் அல்லது இழப்பு குறித்து நீதிமன்றத்தால் நிருணயிக்கப்படுகிற இழப்பீட்டினைச் செலுத்தச்செய்வதன் மூலம் தண்டிப்பது அவசியமாகியுள்ளது.

இந்த நோக்கத்திற்காக, புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் மருத்துவக்காப்புச் சேவைப் பணியாளர்களுக்கு எதிரான வன்செயலைத் தடுப்பதற்கும் மருத்துவக்காப்புச் சேவை நிலையங்களின் சொத்துக்குச் சேதம் அல்லது இழப்பு விளைவித்தலைத் தடுப்பதற்கும் வகையளிக்கிற ஒரு சட்டத்தை இயற்றுவதென உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இச் சட்டமுன்வரைவு மேற்சொன்ன குறிக்கோள்களை எய்த விழைகிறது.

முதலமைச்சர்.

**2011ஆம் ஆண்டு புதுச்சேரி மருத்துவக்காப்புச் சேவைப் பணியாளர்கள் மற்றும் மருத்துவக்காப்புச் சேவை நிலையங்கள் (வன்செயல் மற்றும் சொத்துக்குச் சேதம் அல்லது இழப்பு விளைவித்தலைத் தடுத்தல்) சட்டமுன்வரைவு**

(சட்டமுன்வரைவு எண் /2011)

புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் மருத்துவக்காப்புச் சேவைப் பணியாளர்களுக்கு எதிரான வன்செயலைத் தடைசெய்வதற்காகவும், மருத்துவக்காப்புச் சேவை நிலையங்களின் சொத்துக்குச் சேதம் அல்லது இழப்பு விளைவித்தலைத் தடுப்பதற்காகவும் மற்றும் அவை தொடர்புடைய அல்லது அவற்றுடன் இடைநிகழ்வான பொருட்பாடுகளுக்காகவும் வகையளிக்கிற

**ஒரு**

**சட்டமுன்வரைவு.**

இது, இந்தியக் குடியரசின் அறுபத்திரண்டாம் ஆண்டில் புதுச்சேரி சட்டப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இச் சட்டம், 2011ஆம் ஆண்டு புதுச்சேரி மருத்துவக்காப்புச் சேவைப் பணியாளர்கள் மற்றும் மருத்துவக்காப்புச் சேவை நிலையங்கள் (வன்செயல் மற்றும் சொத்துக்குச் சேதம் அல்லது இழப்பு விளைவித்தலைத் தடுத்தல்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு முழுவதும் அளாவி நிற்கும்.

(3) இது உடனடியாகச் செயல்விளைவுக்கு வரும்.

பொருள்-வரையறைகள்.

2. இச் சட்டத்தில், தறுவாய் பிறவாறாக வேண்டுறுத்துகிறது என்றாலன்றி,--

(a) "மருத்துவக்காப்புச் சேவை நிலையம்" என்பது, நோயாளிகளின் மருத்துவச் சிகிச்சைக்கான மற்றும் அவர்களின் வருகைக்கு அல்லது தங்குகைக்கான(reception and stay) வசதிகளைப் பெற்றிருக்கிற ஏதேனும் தனியார் மருத்துவமனை உள்ளிட்டு பொதுமக்களுக்கு மருத்துவக்காப்பு அளிக்கிற அரசு அல்லது உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டிலுள்ள ஏதேனும் நிலையம் (institution); மகப்பேறு (child birth) தொடர்புடைய பேறுகாலம் (confinement) மற்றும் பேறு முன்கால மற்றும் பேறு பின்காலப் பேணுகை (ante-natal and post-natal care) அல்லது ஏதேனும் அவை

தொடர்புடைய நோக்கத்திற்காக மகளிர் வழக்கமாக வருகைபுரிகிற மற்றும் தங்கவைக்கப்படுகிற ஏதேனும் தனியார் மகப்பேறு இல்லம் (private maternity home); மற்றும் உடல் ரீதியாக அல்லது மன ரீதியாக ஏதேனும் நோய், காயம் (injury) அல்லது பிணியால் திறனிழப்பு(infirmity) காரணமாக துயருறுகிற நபர்களின் வருகைக்கும் தங்குகைக்கும் பயன்படுத்தப்படுகிற அல்லது பயன்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள மற்றும் மருத்துவச் சிகிச்சை அளிக்கிற அல்லது நலமீட்பு சிகிச்சை (nursing) அளிக்கிற அல்லது அவை இரண்டையும் அளிக்கிற ஏதேனும் தனியார் நலமீட்புச் சிகிச்சை இல்லம் (nursing home) எனப் பொருள்படும், மற்றும் இது ஒரு மகப்பேறு இல்லம் (maternity home) அல்லது நோய் நீங்கி நலம் பேணும் இல்லத்தையும் (convalescent home) உள்ளடக்கும்;

(b) ஒரு மருத்துவக்காப்புச் சேவை நிலையம் தொடர்பாக "மருத்துவக்காப்புச் சேவைப் பணியாளர்" என்பது, அத்தகைய மருத்துவக்காப்புச் சேவை நிலையங்களில் பணியமர்த்தப்பட்டுள்ள மற்றும் பணிபுரிகிற பின்வருவோரை உள்ளடக்கும், அவையாவன:-

(i) பதிவுபெற்ற மருத்துவர்கள் (registered medical practitioners) [தற்காலிகப் பதிவு (provisional registration) பெற்றுள்ள நபர் உள்ளடங்கலாக],

(ii) பதிவுபெற்ற செவிலியர்கள்,

(iii) மருத்துவ மாணவர்கள்,

(iv) செவிலிய மாணவர்கள்,

(v) மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் (para-medical workers),

(vi) தற்காலிகமாக, நிலையாக, தனிநிலைப்பணியாக அல்லது பணி ஒப்பந்தத்தின் கீழ் மருத்துவக்காப்பு நிலையங்களில் பணியாற்றுகிற பிறிதொரு நபர் எவரும்;

(c) "சொத்து" என்பது, எவரேனும் மருத்துவக்காப்புப் பணியாளர் அல்லது ஏதேனும் மருத்துவக்காப்புச் சேவை நிலையத்திற்குச் சொந்தமான அல்லது அவரது/அதன் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள அசையும் அல்லது அசையாச் சொத்து அல்லது மருத்துவக் கருவி அல்லது மருத்துவ இயந்திரம் எதுவும் எனப் பொருள்படும்; மற்றும்

(d) "வன்முறை" என்பது, மருத்துவக்காப்புச் சேவைப் பணியாளர் எவரொருவரும் மருத்துவக்காப்புச் சேவை நிலையத்தில் அவரது பணிக்கடமையை ஆற்றுகையில் அவருக்கு தீங்கு அல்லது காயம் விளைவிக்கிற அல்லது அவரது உயிருக்கு ஆபத்து விளைவிக்கிற அல்லது அச்சுறுத்தல் (intimidation), தடை (obstruction) அல்லது இடையூறு (hindrance) விளைவிக்கிற அல்லது சொத்துக்குச் சேதம் அல்லது இழப்பினை விளைவிக்கிற செயல் எதுவும் எனப் பொருள்படும்.

வன்முறை செய்வோருக்-கான தண்டனை.

3. தாமாகவோ அல்லது நபர்களின் குழு (group of persons) அல்லது நிறுவனத்தின் (organisation) ஓர் உறுப்பினராகவோ அல்லது தலைவராகவோ ஏதேனும் வன்முறைச் செயலைச் செய்கிறார் அல்லது செய்ய முயற்சிக்கிற அல்லது செய்ய உடந்தையாக இருக்கிற அல்லது செய்யத் தூண்டுகிற எவரொருவரும், மூன்றாண்டுகளுக்குக் குறையாத ஆனால் பத்து ஆண்டுகள் வரை நீட்டிக்கலாகும் சிறைத் தண்டனை மற்றும் பணத் தண்டனையுடன் தண்டிக்கப்படுவார்.

குற்றச்செயலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.

4. 3ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட குற்றச்செயல் எதுவும் கைது செய்வதற்குப் பிடியாணை வேண்டாத மற்றும் பிணையத்தில் விடப்படக்கூடாத குற்றமாகும்.

சொத்துக்கு விளைவிக்கப் பட்ட சேதம் அல்லது இழப்புக்கான இழப்பீட்டைச் செலுத்து-வதற்கான கடப்பாடு.

5. (1) அத்தகைய வன்முறையைச் செய்த நபர், 3ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தண்டனைக்கும் கூடுதலாக, சொத்துக்கு விளைவிக்கப்பட்ட சேதம் அல்லது இழப்புக்கான இழப்பீட்டினை நீதிமன்றம் நிருணயிக்கிறவாறு செலுத்துவதற்குக் கடப்பாடுடையவர் ஆவார்.

(2) அத்தகைய நபர் (1)ஆம் உட்பிரிவின் கீழ் இழப்பீட்டினைச் செலுத்தத் தவறுகிறவிடத்து, மேற்சொன்ன தொகையானது நிலவரி நிலுவையாகக் கருதப்பட்டு 1970ஆம் ஆண்டு புதுச்சேரி வருவாய் வசூலிப்புச் சட்டத்திற்கான வகைமுறைகளின் கீழ் வசூலிக்கப்படும். சட்டம் எண் 14/1970.

குறித்தசில நடவடிக்கை-களுக்குத் தடை.

6. சொத்துக்கு விளைவிக்கப்பட்ட சேதம் அல்லது இழப்பு குறித்த இழப்பீட்டுக்கான கோருரிமை (claim) எதுவும், மருத்துவக்காப்புச் சேவைப் பணியாளரால் அல்லது மருத்துவக்காப்புச் சேவை நிலையத்தினால் அதிகாரஅமைப்பு எதன் முன்பாகவும் அப்போதைக்குச் செயல்விளைவில் உள்ள பிறிதொரு சட்டத்தின் கீழும் செய்யப்படக்கூடாது.

பிற சட்டங்களின் செயல்பாடு பாதிக்கப்படக் கூடாது.

7. இச் சட்டத்தில் பிறவாறாக வகைசெய்யப்பட்டவாறு அன்றி, இச் சட்டத்தின் வகைமுறைகள் அப்போதைக்குச் செயல்விளைவில் உள்ள பிறிதொரு சட்டத்திற்குக் கூடுதலாக இருக்குமேயன்றி முரணாக அமையாது.